Softview™
Visual Communication

# வேர்கள்

விதை : 1 சாஃப்ட்வியூ இதழியல் மாணவர்களின் பயிற்சி இதழ் வேர் : 2

## புகையில்லா பல்கலைக்கழகம் அண்ணா பல்கலைக்கழகம்

சபரி சித்ரா


புகைப்படம் : ரகுராமன்

அண்ணா பல்கலைக் கழகத்தின் வளாகம் மிகவும் பெரியது. அதனுள் நடந்து செல்வது என்பது பெரும் கடினம். மாணவர்களின் எண்ணிக்கை 4000 பேர் உள்ளனர். ஒரு நாளைக்கு 10000 பார்வையாளர்கள் வந்து செல் கிறார்கள். இதில் 4000திற்கும் மேற்பட்டோர் வாகனத்தில் வந்து செல்கிறார்கள். இதனால் மாணவர்கள், பேராசிரியர்கள் மற்றும் அங்கு பணியாற்றுவோர்களின் பாதிப்பு என்ன? ஒரு நாளைக்கு இத்தனை வாகனங்கள் வந்து செல்லும்போது அதனால் உண்டாகும் ஒலி மாசு, புகையினால் உண்டாகும் பற்பல தடுக்க முடியாத நோய்கள், அதனால் உண்டாகும் பல விபத்துகள் ஆகிய வற்றை தடுக்க வேண்டும் என்று எண்ணி, அண்ணா பல்கலை கழகத்தின் துணை வேந்தர் சமீபத்தில் சுற்றுச் சூழலுக்கு ஆதரவான ஒரு முடிவை எடுத்துள்ளார். என்ன வென்றால் மாணவ, மாணவியர்கள் அனைவரும் தங்கள் வாகனத்தை வளாகத்தின் நுழையும் பகுதியிலேயே நிறுத்தி விட்டு, அங்கிருந்து வகுப்பறைக்கு நடந்தே செல்ல வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்தார்கள். இதைப் பற்றி பி.ஈ. கம்ப்யூட்டர் பயிலும் மாணவி சோபனாவிடம் கேட்ட போது, சில கல்லூரிகளில் பார்த்தால் மாணவர்கள் கல்லூரிக்கு இரண்டு சக்கர வாகனங்களே எடுத்து வரக் கூடாது என்கிறார்கள். அந்த வகையில் பார்த்தால் இந்த உத்தரவை ஏற்றுக் கொள்ளலாம் என்கிறார் நாளடைவில் இதை நடைமுறைப் படுத்தினால் சுற்றுச்சூழல் மாசுவை ஓரளவிற்கு கட்டுப்படுத்த முடியும். பசுமையையும், பூங்காற்றையும் இனிய சூழலையும் மாணவர்கள் சுவாசிக்கமுடியும். ●


Photograph: Raghuraman

Mr. Babu owner of Original KeralaJewellers

## CHOOSING DIAMOND...

*Raghuraman*

A legacy that has stood for over 70 years if your are long-dwelling chennaite, especially a T.Nagar dweller or frequenter, you would not look for behind **ORIGINAL KERLA JEWELLERS** for history in ornament trade and yes, this trade has



been tinted with aesthetic value too, what with gleaming diamonds being part of their affluent jewel repertory........

Mr. Babu Emmanuel owener of (OKJ) Original Kerala Jewellers, of his historic edifice in jewellery business connoisseur in probably world's finest gem, diamond of course, despite his gammed time-tabs, spoke with us delectably of diamonds..........

**Diamonds means?**

The diamond derived its name from the Greek word adamas, which means unconquerable or un-tamable.

**Is a diamond evolved or how is diamond got?**

A mineral transparent and crystalised form of pure carbon. It's the hardest

surface metal known to man because its ever-present hardness lost forever, unlike the other gems. Natural diamonds are issued from earth's upper mantle. The high temperature and pressure under ground causes carbon to crystal to the surface. Thus diamond is formed.

**Can we know bit a about the possession or license for diamonds?**

The largest cut diamonds of rare quality are in the control of the Government. The diamond mined from jager mines are known as "blue jacker". The largest cut diamond in the World come from the Cullinan (1905 premier mine, South Africa WT.3106 Carat)

**How are diamonds brought to India?**

The diamons are brought through diamond trading companies to India.

**About the range of colours in diamonds sir?**

Oh sure! Diamonds appear ornamental orange, pink, blue, and green. But they are known as fancy diamonds and are a rarity.

**How is a diamond cut & shaped?**

Today lasers used to cut diamonds. Earlier this was done manually, but it is too hard to work and get an accurate and symmetrical shape. Laser cut diamonds have different and acute angles and they also gleam more.



**How many shapes do we have in diamonds?**

Diamonds have a minimum of 32 & maximum of 58 facets. Round brilliant diamomds has 58 facets.

**About the diamond- trading companies!**

Yeah, De beers, Nakshtra, Asmi etc are all only brand names. But it's the IGA which gives certifies these diamonds. (Internal Gemological Institute Of India).

**Before buying a Dimond what are the features we must take note of ?**

Basically there are four criteria we must attend to cut, colour, clarity and carat each with its own denomination. For the cut, round brilliant is preferably the best and for colour the standard D&E is the finest. In clarity while the acronyms FL&IF (standing for Flawless and Internal Flawless respectively) is the mark of clarity, in terms of carat (Meaning the purity of the diamonds 4&3 carat diamonds demand greater worth and pride of place of possession ●

# குளிரடிக்கிற நிலாவைக் கொண்டு வந்த சூர்யா

www.tamilcinema.com

**செ**ன்சாரை தவிர மற்றவர்களுக்கு பெஸ்ட் பிரண்டுதான் எஸ்.ஜே.சூர்யா.



எப்போதுமே கலகல பேர்வழியான சூர்யா, சமீபகாலங்களில் ஒரே கலகலப்பு பேர்வழியாக மாறியிருப்பதற்கு காரணம் இருக்கிறது. இரண்டு புதிய படங்களில் ஹீரோவாக நடிக்கிறார். ஒன்றை தானே இயக்க, மற்றொரு படத்தை வேறொருவர் இயக்குகிறாராம். இதற்கிடையில் சிம்புவின் நடிப்பில் இன்னொரு படத்தை இயக்கவும் ஒப்பந்தம் ஆகியிருக்கிறார். தனக்கு முதல் படம் கொடுத்து விளக்கேற்றி வைத்த நிக் ஆர்ட்ஸ் என்ற பட நிறுவனத் திற்குதான் இந்த நன்றிக் கடன்.

சிம்ரனை ஒரு டெல்லிக்காரரர் கொத்திக் கொண்டு போய்விட்டாரே என்ற கவலை யோடு இருந்த தமிழ் தேசத்தை சேதப்படாமல் தாங்கிப்பிடித்திருப்பது சூர்யாவின் சமீபத்திய அரிய தொண்டு. தன் அடுத்த படமான பெஸ்ட் பிரண்ட்க்கு ஹீரோயின் தேடிக் கொண்டிருந்தவர் டில்லியில் ஒரு ஷாப்பிங் காம்ப்ளக்சில் மீராவை பார்த்தாராம். பார்த்தவுடனேயே அள்ளிக் கொண்டு வந்திருக்கிறார். குளிர்ச்சியாக இருக்கட்டுமே என்பதால் நிலா என்று பெயர் மாற்றம் செய்திருக்கிறார் மீராவிற்கு.

சூர்யாவை வியப்பதும், ரசிப்பதும்தான் நிலாவின் பொழுதுபோக்காக இருக்கிறது. தான் நடித்த நியூ வை போட்டுக்காட்டி, நிலா மனசில் பெஸ்ட் டைரக்டர் என்ற இடத்தையும் பிடித்துவிட்டாராம். தினமும் நிலாவுக்கு நடிப்பு பயிற்சி, தமிழ் கற்றுக் கொடுத்தல் என்று பிஸியாக இருக்கிறார்.

அதென்ன பெஸ்ட் பிரண்ட்? தமிழில் டைட்டில் வைத்தால் ஆகாதா என்று கேட்பவர்களுக்கு சூர்யா சொல்லும் ஒரே பதில். இப்போதைக்கு விட்டுடுங்க. அடுத்த படத்தில் நீங்க சொல்றதை கேட்கிறேன் என்பதுதான்.

பிடிவாதம் பெரிசா? பிறர் வாதம் பெரிசா? படம் வந்தா தெரியும் போல....

# Tourist Centres in Tamilnadu

**r Kothandaraman**

### KACHEEPURAM

The city of thousand temples, Kancheepuram is one of the seven sacred cities of India. A former capital of the pallavas, it is famous for the exquisitely woven silk sarees. Places to see include Ekambareswarar Temple, Varadhgaraja Perumal Temple, Vaikunda Perumal Temple, Kamakoti Mutt, Kailasanathar Temple, Kamatchi Amman Temple etc.,

During 1994 roughly 5.3 Lakh domestic tourists and 0.25 lakh foreign tourists visited here whereas during 2000 roughly 6.9 lakh domestic tourists and 0.38 foreign tourists have visited here.

Thirty Indian Tourists have been selected and surveyed in this center.

### CHIDAMBARAM

It is famous for the temple dedicated to Lord Nataraja, the Cosmic Dancer (Lord Siva). The Annamalai University located here is a major residential University, Pichavaram a dense mangrove forest is the nearest place for sight seeing.

### TIRUCHIRAPALLI

Tiruchirapalli known for its rock fort temple at height of over 83 metres. Other renewed temples are Sri. Ranganathan Swamy Temple (Srirangam), the Siva temple at Thiruvanaikaval and Samayapur Mariamman Temple, worthwhile visits include Narthamalai, Sithannavasal Kudumiyammalai, Kodumbalur. Famous for their ancient across the Cauvery river, built by the Chola King Karikalai in 2nd Century A.D. is an engineering marvel and fine picnic spot.

### THANJAVUR

The home of Carnatic music, Musical instruments, dance and Traditional handicrafts, Thanjavur is famous for the Brahadeeswaran Temple. The temple, constructed more than a thousand years ago by the Cholai King Raja Raja is an architect's marvel. The art Gallery and the Saraswathi Mahal Library are also places of interest.



### RAMESWARAM

One of the most sacred towns of India, it is well known for its temple Corridor, the largest of its kind, the Bathing Ghat, Ganthamathana Parvatham, Kothandaramar Temple, Kurusadai and other nearly by islands.

### MADURAI

Once the capital city of Pandyas, Madurai is the Second largest city in Tamil Nadu. It is famous for the Meenakshi Temple with its towering Gopurams and rare Sculptures. Other important attractions include Thirumalai Naicker Mahal, Mariamman Temple, Koodal Alagar Temple and the Gandhi Museum.

### KODAIKANAL

Kodaikanal is one of India's most beautiful hill stations located at an altitude of 2,133 mts (7000 feet) frequented by tourists in large numbers throughout the year.

### UDHAGAMANDALAM

Popularly referred to as "Queen of Hill Stations" Ooty (Udhagamandalam) is located at a height of 2,288 mts (7,500 feet). Popular tourist attractions include the Botanical Gardens, Lake, Doddabetta Mukurthi Peak, the Pykara Dam and Sprawling tea plantations.

### KANNIYAKUMARI

Another famous Piligrim Centre situated at the land's end of India, at the confluence of the Indian Ocean the Bay of Bengal and the Arabian Sea. The Kumariamman Temple, the Colossal 133 foot tall Tiruvalluvar Statue, Gandhi Memorial, the Beach and the Vivekananda Memorial are the Places of Interests.

### LESS KNOW PLACES (PICNIC SPOTS) IN TAMIL NADU DECLARED BY GOVT. OF INDIA.

Vedanthangal, Amirthi forest, Bhavani, Theerthamalai, Kolli Hills, Kalvaryan hills, Point Calkimere (Kodiakarai), Srirangam, Thiruchengodu, Thirupulani, Mundanthurai, Kalugumalai, Tenkasi, Kothaiaru, Tiruparappu Falls, Moondradaippu, Kanchirankulai, Vaigaidam, Palmuthircholai, Viralimalai, Maruthamalai, Chitannavasal, Pillairapatti, Pichavaram, Kalayar Koil, Kangai Knoda Cholopuram, Perur, Thirumurthymalai, Palaverkadu, Vallimalai, Senjikottai, Sathanurdam, Athiyamankottai, Thiruvakkarai, Mukkombu, Kunnur, Pykara Falls, Perijam Eri, Manora, Vattakottai, Koodanku lam, Papanasam Falls. ●

# எஸ்.M.எஸ் Joக்ஸ்

*- Raghu Raman*

- Aeroplane asked the rocket, Friend why do you fly so fast? Poda dubbuku Unukku pinnadi Nerupu vacha Appa Theriyum.
- Sardar went to his Mamanar House for New Year and he was eating some snacks. Sardar : Intha Muruku Vithyasama Irukka, Athu Muruku ilae Mappilae Musquito coil.
- டேய் மச்சான் என் பர்ஸ் யாரோ பிக் பாக்கெட் அடிச்சிட்டான் மச்சான் இப்பதான் நீ உஷாரா இருக்கணும், ஏன்னா திருடுனவன் கொலை வெறியோட இருப்பான்!
- அன்று ஒரு நாள்...
  ஒரு மாலை வேளை...
  நான் ரயிலுக்கு உள்ளே...
  நீ வெளியே...
  நம் இருவர் கண்களும் ஒரே நேரத்தில் சந்தித்தபோது...
  உன் முகத்தில் எத்தனை உற்சாகம்...
  அப்போது...
  அப்போது தான்...
  நீஅந்த வார்த்தையை சொன்னாய்
  ஐயா சாமி தர்மம் போடுங்க...
- Raja & Rani tired of using Mobiles,Decided two use pigeons. One Day Pigon Reaches Raja Without Messages Angry Raja calls Rani. Rani says Idiot it was a Missed Call.

# ஆதி முதல் இன்று வரை

**துர்கா**

**இந்தியாவில் முக்கியமான மடங்களில் ஒன்றாக கருதப்படும் காஞ்சி மடமும் சங்கராச்சாரியார் – ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளும் இன்று பலராலும் பேசப்படுவதற்கு காரணம் என்ன? இந்த மடத்தின் வரலாறு என்ன? என்பவர்களுக்கு...**

கேரள மாநிலம் காலடி கிராமத்தில் ஆறாம் நூற்றாண்டுவாக்கில் ஒரு ஏழை மலையாள பிரமாணருக்கு பிறந்தவர் ஆதி சங்கரர். இவர் தன்னுடைய 10-வது வயதில் சன்னியாசம் அடைந்தார். அந்த காலந்தொட்டு மொத்தம் 72 மதங்கள் வரை தோன்றியிருக்கிறது. இந்து சமயத்தை பரப்பும் நோக்கோடு 4 மடங்கள் அமைக்கப்பட்டது. அதில் தெற்கில் அமையப்பெற்றது தான் காஞ்சி மடம்.

அறுபத்தி எட்டாம் சங்கராச்சாரியார் சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள், இவருக்கு பின் வந்தவர் தான் சங்கராச்சாரியார் ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள். 1935-ஆம் ஆண்டு மகாதேவ் அய்யா சரஸ்வதி அம்மையாருக்கு மகனாக தஞ்சாவூரில் பிறந்தார். இவருடைய இயர் பெயர் சுப்பிரமணியன். 1954-ம் ஆண்டில் ஜெயேந்திர சரஸ்வதி சுவாமி என்ற பெயரோடு 69வது சங்கராச்சாரியாராக காஞ்சி காமகோடி பீடம் ஏறினார்.

இந்து சமயம் காக்கப்படவேண்டும் என்ற எண்ணத்தினால் ஏற்படுத்தப்பட்ட காஞ்சி மடம் கேள்விக்குள்ளாகி இருப்பதற்கு என்ன காரணம் என்பது குறித்து பத்திரிக்கைகள் பலவாறாக தெரிவித்துக் கொண்டிருக்கின்றன.

ஸ்ரீ வரத ராஜ பொருமாள் கோவில் மேலாளர் சங்கர ராமன் கடந்த செப்டம்பர் மாதம் 3-ம் நாள் மாலை 4,30 மணிக்கு படு கொலை செய்யப்பட்டார், இந்த படுகொலை சம்பந்தமாக போலீசார் விசாரணை நடத்திய போது, கூலி ப்படையை வைத்து காஞ்சி மடாதிபதி சங்கராச்சாரியார்தான் கொலை செய்திருக்கிறார் என்பதற்கான ஆதாரங்கள் கிடைத்தது, இதனையடுத்து நவம்பர் 13-ம் தேதி ஆந்திராவில் உள்ள மெகபூப் நகரில் இரவு 10 மணிக்கு காஞ்சி மடாதிபதி சங்கராச்சாரியார் ஜெயேந்திரர் சரஸ்வதி சுவாமிகள் கைது செய்யப்பட்டார்.

ஜெயேந்திரரின் தவறுகளை சங்கரராமன் மடாதிபதியை தட்டிக் கேட்டதாகவும், அத் தவறுகளை அம்பலப்படுத்தி விடுவதாக மிரட்டியதால் கொலை செய்யப்பட்டார் என்று செய்திகள் வெளியாகின.

இந்த கைதுப் பற்றி பத்திரிக்கைகளில் செய்திகள் பல்வேறு கோணங்களில் வெளி வந்துள்ளன. இதனுடன் சம்பந்தப்பட்ட ஆதாரங்கள், விசாரணைகள், சாட்சிகள் போன்றவை குறித்த செய்திகள் கிடைத்துள்ளன. ஆனால் காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை பல பிரபலங்களும் இந்த கைது சம்பவத்தைப் பற்றி கூறிய பல்வேறு கருத்துக்கள் மக்கள் எப்படி இந்த பிரச்சனையை அணுகுவது என்பதற்கும் ஒரு பிரச்சினையை எப்படியெல்லாம் பார்க்கலாம் என்பதற்கும் உதவியாக இருக்கும்

### இந்த கைது சம்பவம் குறித்து பல்வேறு தலைவர்கள் என்னென்ன கருத்துக்கள் தெரிவித்தனர் என்பதை கவனிக்க வேண்டியுள்ளது.

- காஞ்சி சங்கராச்சாரியார் மீது தொடரப்பட்டுள்ள வழக்கு பொய்யானது. யாரோ வேண்டுமென்று அரசியல் செல்வாக்கினைப் பயன்படுத்தி, பொய் குற்றச்சாட்டையும், மடத்தின் புகழை குறைப்பதற்காகவும் செய்த நடவடிக்கை என்று **ஜெயேந்திரர் வக்கீல் ஒய். தியாகராஜன் கூறினார்.**
- **விசுவ இந்து பரிஷத் மூத்த துணை தலைவர் ஆச்சார்ய கிரிராஜ் கிஷோர்**, சங்கராச்சாரியார் சாதாரண ஒரு கிரிமினல் குற்றவாளி போல் அடைக்கப்பட்டிருக்கிறார். தமிழக அரசு ரம்ஜான் பரிசாக இந்த நடவடிக்கையை எடுத்தது கண்டித்தக்கது. காஞ்சி சங்கராச்சாரியாரை விடுதலை செய்ய வேண்டுமென அறிவித்தார்.
- இந்த கைது நடவடிக்கை தீபாவளியை கருப்பு தீபாவளியாக மாற்றிவிட்டதென **விசுவ இந்து பரிஷத் தலைவர் பிரவின் தொகாடியா கருத்து தெரிவித்துள்ளார்.**
- மத்திய அரசு, இடதுசாரி, தி.மு.க. காங்கிரஸ் மற்றும் சுயநல சக்திகள் தான் காரணம். மேலும், சோனியாவும் இதன் பின்னணியில் இருக்கிறார். 80 கோடி இந்துக்களின் கலாச்சார பெருமையை ஓரம் கட்டுவதற்காக இஸ்லாமிய, கிறிஸ்துவ சதி என்று **விசுவ சர்வதேச தலைவர் அசோக் சிங்கால் கூறினார்.**



- உடனடியாக விடுதலை செய்ய வேண்டும். பூஜைகள் பாதிக்கப்படாமல் தமிழக அரசு பார்க்க வேண்டும். வரலாற்று சிறப்பு மிக்க காஞ்சி மடத்துக்கு ஆதரவாக இந்து சமுதாயம் ஒட்டு மொத்தமும் அணி திரள வேண்டுமென **ஆர்.எஸ்.எஸ். இயக்க செய்தி தொடர்பாளர் சாம்மாதவ் தெரிவித்தார்**,
- சுவாமி மாதநாத் டெல்லியிலும், துணைத் தலைவர் எஸ். வேதாந்தம் சென்னையிலும் கண்டனம் தெரிவித்துள்ளனர். **இந்த கைது நடவடிக்கை தொடர்பாக பிராமணர் சங்கம் ஜெயேந்திரரை ஜாமீனில் விடுதலை செய்யக்கோரி வலியுறுத்தியது.** சங்கராச்சாரியார் கைதுப் பற்றி இந்து இயக்கங்களின் அமைப்பாளர், அயல்நாட்டு சதி, சர்வதேச சக்திகளும் அரசியல் சதி மூன்றும் ஈடுபட்டுள்ளன என பேட்டியளித்தார்கள்.
- **முரளி மனோகர் ஜோஷி கூறியதாவது,** இந்த விவகாரம் குறித்து முதல் அமைச்சருக்கு அறிக்கை அனுப்புவேன். குற்றச்சாட்டை நிரூபிக்கப்படும் வரை அனைவருமே அப்பாவிகள் தான் ஜெயேந்திரருக்கு ஜாமீன் வழங்கக்கூடாது என்று ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்த தந்தை பெரியார் தி.க.தலைவர் **கௌத்தூர் மணி** வெடிகுண்டு வழக்கில் கைதான மதானி தினசரி 5 முறை தொழுகை நடத்த வேண்டும். ரம்ஜான் நோன்பு இருக்க வேண்டும் என ஜாமீன் கேட்டதற்கு மறுப்பு தெரிவித்தனர். ஆகவே, ஜெயேந்திரர் பூஜை செய்வதற்காக ஜாமீன் கேட்டால் வழங்கக்கூடாது என மனு அப்பீல் செய்துள்ளார்.
- தனிமனித உரிமை மீறப்படுவதாக ஜார்ஜ் பெர்னாண்டஸ் பேட்டி அளித்துள்ளார்.
- **ஜெயேந்திரர் கைதுப் பற்றி சேலம் குட்டிச்சாமியார்** : ஜெயேந்திரர் கைதுப் பற்றி மிகவும் மனவருத்தம் அளிக்கிறது. பாமர மக்களுக்கும் சோதனை, பரம்பொருளுக்கும் சோதனை. பகவானின் சோதனை என்ற வளையத்தில் தள்ளாடல் இருந்தது இல்லை. இந்துமக்களின் தத்தளிப்பு இந்து மக்களின் மனக் கண்ணீர் சன்னியாசிகளுக்கு மிகப் பெரிய வருத்தம் என்றார்.
- **கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் சீதாராம்யெச்சூரி கூறியன பின்வருமாறு:** யாத்திரையின் போது அத்வானி கைது செய்யப்பட்டபோது விருந்தினர் அறையில் தான் காவலில் வைத்தனர். ஏன் ஜெயேந்திரரை இப்படி காவலில் வைக்கக்கூடாது? என்று கேள்வி எழுப்பினார்.

ஜெயேந்திரரை விடுதலை செய்யாவிட்டால் தற்கொலை செய்வோம் மடாதிபதிகள் ஆவேசம். சில மடாதிபதிகள் பேசுகையில், "காஞ்சி, மடாதிபதியை விடுதலை செய்யாவிட்டால் ஆத்மார்ப்பணம் செய்து கொள்வோம்" என்று ஆவேசமாக கூறினார்கள்.

கொலை செய்யப்பட்ட சங்கரராமனின் மனைவி பேட்டி வழக்கில், துரித நடவடிக்கை எடுத்த ஜெயலலிதாவிற்கு பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

- மதத்தலைவருக்கு உரிய அந்தஸ்துடன் ஜெயேந்திரர் நடத்தப்பட வேண்டும் என்று மன்மோகன் சிங் விருப்பம் தெரிவித்துள்ளார்.

### ஜெயேந்திரர் புகார் பற்றி வெளிப்படையாக கூறத் தயாரா? கருணாநிதிக்கு ஜெயலலிதா சவால்?

ஸ்ரீஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளைக் கைது செய்து நடுநிலையோடு நியாயமான முறையில் நடவடிக்கை மேற்கொண்டதற்காக, தமிழ்நாடு அரசை கருணாநிதி விரைந்து பாராட்டினார். அதன் பிறகு, தி நியு இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழில் கொலைக்குப் பிறகு கைது செய்ய முழுதாக இரண்டரை மாத காலம் அ.தி.மு.க. அரசு எடுத்துக் கொண்டது ஏன்? என்ற கேள்வி எழுப்பினர். இதற்கு பதிலளித்த ஜெயலலிதா இது முற்றிலும் பொறுப்பற்ற தீய எண்ணம் கொண்டவர் அறிக்கையாகும். வேறு யாராலும் இதைவிடச் சிறப்பாக பல்டி அடிக்க முடியாது என்று கூறினார்.

ஜெயேந்திரர் மீதான வழக்கு விசாரணையை மிகுந்த கவனத்துடன் நடத்த வேண்டும். ஜெயலலிதாவுக்கு மன்மோகன் சிங் கடிதம் எழுதினார். இதற்கு "ஜெயிலில் இருக்கும் ஜெயேந்திரர் கவுரவத்தோடும், பரிவோடும் நடத்தப்படுகிறார்" என்று பிரதமருக்கு ஜெயலலிதா பதில் கடிதம் எழுதினார்.

## ஆதாரங்கள்

- V குற்றவாளிகளிடமிருந்து கைபற்றப்பட்ட 40 லட்சம் ரூபாய்
- V தொலைபேசியில் சங்கராச்சாரியார் கொலைகாரரிடம் பேசியவை
- V வங்கிக் கணக்கிலிருந்து எடுக்கப்படம் பெருந்தொகை
- V சங்கரராமன் எழுதிய 39 கடிதங்கள்

சங்கரராமன் கொலை வழக்கில் குற்றத்தை ஜெயேந்திரர் ஒப்புக் கொண்டார் – அரசு தரப்பு வக்கீல் தகவல் தெரிவித்தார். .

ஜெயேந்திரர் கைது விவகாரத்தில் பா. ஜனதா இந்து அமைப்புகளுடன் இணைந்து ஆர்ப்பாட்டங்கள் நடத்தி அரசியல் ஆதாயம் தேட முயற்சி செய்கிறது என்று வைகோ குற்றம் சாட்டினார்.

- ஜெயேந்திரர் நலமாக இருக்கிறார். அவரை நன்றாக கவனிக்கிறாதர்கள் என்று வேலூர் ஜெயிலில் சந்தித்த உமா பாரதி பேட்டியளித்தார்.
- சர்ச்சை குறித்து எனது பதில், போலீசாருக்கு திருப்தியாக இருந்தது என்று நடிகை சொர்ணமால்யா பேட்டி கொடுத்தார்.

சட்டப்படி அணுக வேண்டிய ஒரு விஷயத்தை ஆட்சியாளர்களும், அரசியல் வாதிகளும் எப்படியெல்லாம் வளைக்க முயலுகின்றனர் என்பதை அவர்களின் கருத்துக்களை வைத்தே தெரிந்து கொள்ளலாம். குற்றவாளியா சுத்தவாளியா என்பதை நீதிமன்றம் பார்த்துக் கொள்ளும். பிறகு ஏன்? இத்தனை அறிக்கைகள், பேட்டிகள், போராட்டங்கள் ஓ இதான் அரசியலோ? பாவம் பொதுஜனம் செய்திகளைப் படித்துவிட்டு கதைத்துக் கொண்டே இருக்கக்கடவதாக.

## U r Taste

- A DOTS Conference and Exhibition on Tuberculosis Awareness and Medication was arranged at Hotel Abu Palace in Chetput on the 16th and 17th of December. Dr. Rao delivered a lecture to the students of Loyola and Stella Marys as part of the programme.
- Rajinikanth's second daughter Sondarya Rajinikanth busy with school and Multimedia activities
- China claims K2, Godwin Austin (the highest peak in India) to be hers.
- Second term White House occupant President George W. Bush was awarded by the Time Magazine. Emissaries including Fahrenheit 9/11s Director Michael Moore were present at the award-giving function.
- Little Theatre's Producer Mrs. Aisha Rao dedicates this years Christmas Pantomime, Hercules, by her team to her late father, she nostalgically quoted her father saying. "My father, always believed that no matter what life must go on. This year's performances are a tribute to him".


Softview
வேர்கள்
விதை : 1 சாஃப்ட்வியூ இதழியல் மாணவர்களின் பயிற்சி இதழ் வேர் : 2

**சாஃப்ட்வியூ இதழியல் மாணவர்களால் வெளியிடப்படும் பயிற்சி இதழ். இதில் வெளியிடப் பட்டு இருக்கும் கருத்துக்கள் அனைத்தும் இதழியல் பயிற்சிக்காக மாணவர்களால் தொகுக்கப் பட்டது.**

தொடர்பு முகவரி
இதழியல் துறை
**சாஃப்ட்வியூ**
117, நெல்சன் மாணிக்கம் ரோடு,
சென்னை - 600 029.
தொலைபேசி : 5211 3535
http://www.tamilcinema.com/vergal

# காணி நிலம் வேண்டும் முதலீடு




அனைத்து மக்களுக்கும் மிகவும் அவசியமான ஒன்று குடியிருக்க ஒரு வீடு. அதை சொந்தமாக வாங்கி குடியிருக்கத்தான் அனைவருக்கும் ஆசை. வருமானம் குறைவாக யிருந்தாலும், அதில் சிறிது சேமித்து தவணை முறையிலாவது ஒரு சொந்த வீடு (அ) மனை வாங்கலாம் என்று எல்லோருக்கும் விருப்பம். அது மட்டுமின்றி மக்களுக்கு இது அசையா சொத்தாகவும் இருக்கிறது. சென்னை மாநகரத்தில் காலியிடங்கள் எல்லாம் கட்டிடங்களால் நிரப்பப் பட்டுவிட்டன. காலியிடத்தை அப்படியே வாங்கினாலும், பல லட்சம் மற்றும் கோடி விலைப் போகும். மேலும், மக்கள் விரும்பு மிடத்தில் வீட்டு மனைகள் வாங்க இயலாது. விலை அதிகமாக உயர்ந் துள்ளது. இதற்கு காரணம் பத்து வருடத்திற்கு முன்னால் பல நிதி நிறுவனங்களில் மக்கள் முதலீடு செய்து ஏமாற்றப்பட்டனர். ஆகை யால் மக்களுக்கு நல்ல சேமிப் பாகவும், லாபகரமாகவும் விளங்கு வது நிலத்தில் முதலீடு செய்வது தான். இதனால் சென்னை புறநகரங் களிலுள்ள வீட்டு மனைகளும் விலை உயர்ந்துள்ளது. சென்னையிலிருந்து சுமார் 50 கிலோ மீட்டர் சுற்றியுள்ள வீட்டு மனைகள் இரண்டு மடங்காக உயர்ந்துள்ளது. இது மக்களுக்கு சொத்து மட்டுமின்றி வாடகை என்ற பெயரில் வருமானம் வருகிறது. பல வங்கிகள் இதற்காக நிதி உதவி அளிக்கிறது. குறிப்பாக மென் பொருள் நிறுவனங்களில் வேலை புரியும் இளைஞர்கள் மிக அதிகம் ஆர்வம் காட்டுகிறார்கள், இதற்கு காரணம் அவர்களுடைய வருமானம் அதிகமாக இருப்பதால் முதலீடு செய்வதற்கு சிறந்த வழியாக உள்ளது. அதேப்போல் வெளி நாட்டில் வசிக்கும் இந்தியர்கள் பலரும், முதலீடு செய்யும் பொருட்டு பல இடங்களில் வீட்டு மனைகள் வாங்குகிறார்கள். சென்னை - செங்கல்பட்டு,சென்னை-திருவள்ளூர் போன்ற இடங்களில் வீட்டு மனைகள் மிகவும் அதிகமாக உயர்ந்துள்ளது. இதற்கு முக்கியக் காரணம், அகல பாதை இரயில் வசதி, குடிநீர் வசதி மாசு இல்லாத சுற்றுச் சூழல் போன்றவை இருப்பதால் மக்கள் இதுபோன்ற இடங்களை விரும்பு கிறார்கள். வீட்டுமனைகள் விலை குறையவேண்டும் என்றால், மக்கள் முதலீடு செய்வதற்கு இதற்கு மாற்றாக வேறு ஏதேனும் வழியவேண்டும். வங்கிகளில் வட்டி விகிதம் மிகக் குறைவாக யிருப்பதால், வங்கிகளில் முதலீடு செய்வதை தவிர்க்கிறார்கள். இதனால், வீட்டு மனைகளை அதிகமாக வாங்கு கிறார்கள். இதே வேகத்தில் சென்றால், விவசாயம் செய்யுமிடங்கள் எல்லாம் வீட்டு மனைகளாக மாறிவிடும்.

இது மட்டுமின்றி வரும் காலங்களில் ரியல் எஸ்டேட் நிதிய முதலீடு இந்தியாவில் வர இருப்பதால் சொத்துக்களான நிலம் மற்றும் கட்டிடங்களில் முதலீடு செய்வது இரு மடங்கு ஆகும். இந்த நிதிய முதலீட்டின் பெயர் பரஸ்பர நிதி. இந்த திட்டத்தின் சிறப்பு என்னவென்றால் இத்திட்டத்தில் முதலீட்டாளர்கள் செய்யும் முதலீட்டை ஒரே நிறுவனப் பங்குகளில் முதலீடு செய்யாமல், பல நிதியங்கள் மற்றும் பங்குகளில் பிரித்து முதலீடு செய்வதாகும் முதலீடு செய்துள்ள யூனிட் தாரர்களுக்கு இது லாபமளிப்பதாக உள்ளது. அசையா சொத்து முதலீடு திட்டத்தின்கீழ் முதலீடு செய்யப்பட்ட சொத்தை விற்பது அல்லது நிலமுள்ள இடத்தின் மீது வர்த்தக வளாகம் கட்டுவது அல்லது குடியிருப்புகள் உருவாக்குவது அல்லது குத்தகைக்கு விடுவது மூலம் கிடைக்கும் வருவாய் யூனிட் தாரர்களுக்கு பிரித்து லாபமாக வழங்கப்படுகிறது.

இந்த திட்டம் இன்று வரை இந்தியாவில் அறிமுகம் செய்யப் படவில்லை. வளர்ந்த நாடுகளிலுள்ள நிறுவனங்கள் இந்த திட்டங்களில் அதிக அளவில் முதலீடு செய்து வருகின்றன. இந்த திட்டத்தை இந்தியாவுக்கு கொண்டு வர திட்டம் உருவாக்கியுள்ளது. காப்பீட்டு நிறுவனங்களும் இந்த ரியல் எஸ்டேட் முதலீட்டு திட்டத்தை இந்தியாவில் கொண்டு வருவதற்கு தீவிர முயற்சி எடுத்து வருகின்றன.



தமிழகத்தின் பெரிய நகரங்கள் மற்றும் தலைநகர் சென்னையிலும் நிலம் மற்றும் கட்டிடங்களை வாங்க போட்டி நிலவுகிறது, சென்ற ஆண்டில் இந்திய பங்குகளில் செய்யப்பட்ட முதலீட்டு வருவாய் சுமார் 12% சதவீதம் அதிகரித்துள்ளது. தங்கத்தில் செய்யப்பட்ட முதலீடு 11.6% சதவீதமாகும். கடன் பத்திரங்கள் மீது செய்யப்பட்ட முதலீடு ஆண்டுக்கு 8 சதவீத வருவாயை தந்துள்ளது. இவற்றோடு ஒப்பிடும்போது நிலம் மற்றும் சொத்தில் செய்யப்படும். முதலீடு அதிக லாபத்தையும், வருவாயையும் தரும் என எதிர் பார்ப்பதால் வரும் ஆண்டுகளில் நிலம் மற்றும் சொத்தின் விலை கடுமையாக உயரும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

- கோதண்டராமன்

# ரோமியோஸ் சாய்ஸ்

- சுரேஷ்

அன்பளிப்பு என்றாலே ஒரு விதமான சந்தோஷம் நம் எல்லோர் மனதிலும் தோன்றும். அதை கொடுப்பவர், வாங்குபவர் ஆகிய இருவருக்குமே அது மகிழ்ச்சி அளிக்கும். பண்டிகை தினங்கள், பிறந்த நாள் மற்றும் சுபதினங்களுக்கு அன்பளிப்பு அளித்து வாழ்த்து கூறுவது நம் வழக்கம்.

பரிசு கொடுப்பதை விட அதை தேர்ந்தெடுப்பது தான் பலருக்கு சிக்கலான விஷயமாகும். நாம் கொடுக்கும் அன்பளிப்பை பெருபவருக்கு பிடிக்குமா? சரியான பொருளைத்தான் நாம் தேர்வு செய்தோமா? என்ற தயக்கம் இருக்கும். எல்லா பண்டிகைகளிலும், எல்லா நிகழ்ச்சிகளிலும், பூங்கொத்தை வழங்குவதை அன்றாட நாம் காண்கிறோம். இயற்கை மலர்களை கொண்டு செய்யப்படும் பூங்கொத்தை பற்றியும் அதிலிருக்கும் மலர்கள் பற்றியும் நாம் எல்லோரும் அறிந்திருக்கமாட்டோம். மனிதன் இவ்வுலகில் பிறந்தது முதல் இடுகாடு செல்லும் வரை மலர்கள் அவனது வாழ்க்கையில் பெரும்பங்கு வகிக்கிறது. அவனை இவ்வுலகிற்கு வரவேற்பதும் மலர்கள் தான் வழியனுப்புவதும் மலர்கள் தான்.

இதில் ரோஜா பூக்கள், ஆசன் பூக்கள், லேட்ஸ் பூக்கள், பைப்ரோங் (கிறிஸ்துமஸ்) இலைகள், ஜர்புரா, கார்ட்னஸ், தாண்டேரியம், டயானா, வில்போசி, புளுட்டேசி, குயின், சைகாஸ், ஆகிய பூக்கள் அடங்கும். இதில் மணம் கமழும், மனம் கவரும் ரோஜா பூக்கள், பல வண்ணங்களில் உள்ளது. இதில் உள்ள ஒவ்வொரு நிறத்தையும் உறவு முறைக்கேற்றாற் போல் கொடுப்பது வழக்கம். சிவப்பு நிற ரோஜா பூக்களை காதலர்களும், மஞ்சள் நிறம் நண்பர்களும், வெள்ளை நிறம் தங்கைக்கும், பச்சை மற்றும் நீல நிறத்தை ஆறுதலுக் காகவும், பிங்க் நிறத்தை எல்லா உறவுமுறைகளுக்கும் கொடுக்கலாம்.

பூங்கொத்தில் அடங்கியிருக்கும் பூக்களில் ரோஜாவை தவிர மற்ற பூக்களுக்கு வாசம் இருக்காது. இவர்கள் தயாரித்து தரும் பூங்கொத்து இரண்டு நாட்கள், அதே பொலிவுடன் இருக்கும். பூங்கொத்தின் விலை ரூபாய். 50, 75, 100, 200 ஆகிய விலைகளிலும் வாங்குவோரின் நிதி நிலையை பொறுத்து அதை விட கூடுதல் விலைகளிலும் கிடைக்கிறது. தற்போதைய கால கட்டத்தில், எந்தவித விழாக்கள், நிகழ்ச்சி யானாலும் 'பொக்கேட்' அன்பளிப்பு இன்றியமையாதது ஆகிவிட்டது குறிப்பிடத்தக்கது. ●






# காக்க... காக்க...

**– அஷ்வத்**



**ஓம் ஸ்ரீ குருவே நமஹ**

**"உடம்பாரழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தேன்
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே"**

– திருமூல நாயனார்

நம்முடைய மூதாதையர்களால், நமக்காக விட்டுச் சென்ற கலைகளில் யோகக் கலையும் ஒன்று. அக்கலை உன்னத மான தெய்வீகக் கலை என்று போற்றப் படுகிறது. பகவான் கிருஷ்ணரின் கீதா உபதேசத்தில் மாவீரன் அர்ஜுனனுக்கு யோகத்தைப் பற்றி விரிவாக விளக்கு கின்றார். இக்கலை சுமார் கி.மு. 2000 ஆண்டுகளுக்கு முன் தோன்றியதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். அதற்கு ஆதாரமாக சிந்து சமவெளி நாகரிகத்தில் அழிந்து விட்ட மொகஞ் சதாரோ, ஹரப்பா ஆகிய நகரங்களை புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்தபோது யோகா சின்னங்கள் கண்டெடுத்துள்ளதாக சான்றுகள் கூறுகின்றன.

முற்காலத்தில் வாழ்ந்த சித்தர்களில் மிகவும் போற்றத்தக்கவர்கள் 18 சித்தர் கள் ஆவார்கள். அவர்களால் திருமூலர் என்கின்ற சித்தருக்கு 3000 ஆண்டுகள் வாழ்ந்து ஆண்டு 1 பாடல் வீதமாக 3000 பாடல்கள் எழுதியுள்ளார். அவர் இயற்றிய பாடல்கள் 'திருமந்திரம்' என்று போற்றப்படுகிறது. திருமந்திரத்தில் திருமூலர் அட்டாங்க யோகத்தைப் பற்றி விளக்கமாக கூறுகிறார். குறிப்பாக எட்டு இருக்கைகள் பற்றி விளக்கியுள்ளார். இவருக்கு பின் வந்த பதஞ்சலி முனிவர் யோகக் கலையினை வரையறை செய்தார். எனவே, இவரை யோகத்தின் தந்தை என போற்றுகின்றனர். இவர் யோகத்தை 8 படிகளாக பிரித்துள்ளார். அவை இயமம், நியமம், ஆசனம், பிரணோயாமம், ப்ரிதியாகரம், தாரணை, தியானம், சமாதி ஆகிய பயிற்சிகள் மட்டும் தற்போது நடை முறையில் உள்ளது. ஆசனங்கள் மொத்தம் 84 இலட்சம் என்று இந்திப் புலவர் செரன்டாஸ் கூறுகின்றார். தற்காலத் தில் அனைத்து ஆசனங் களையும் செய்ய காலம் போதாது. எனவே, குறிப்பிட்ட சில ஆசனங்கள் மட்டும் தவறாமல் குறிப்பிட்ட நேரத்தில் தினம் பயிற்சி மேற்கொள்ளப் படவேண்டும்.

தற்போது நடைமுறையில் பயிற்று விக்கப்படும் பயிற்சிகளை கீழ்க் கண்டவாறு பிரிக்கலாம். அவை வறத யோகம் எனப்படும்.

**1. தியானம்**

தியானம் பலவகைப்படும். குறிப்பாக ஓங்கார தியானம், மந்திர தியானம், எண்ணிக்கை தியானங்களை பயில்வ தால் மன அமைதிக்கும், மன ஒருமைப் பாடு ஏற்படவும் ஆதாரமாக அமை கிறது.

**2. பிரணாயமம் :**

இதில் பலவகைப் பயிற்சிகள் உள்ளன. குறிப்பாக நோய் தீர்க்கக் கூடிய பிரணாயாமங்கள் 4 வகைப்படும். இதனைத் தொடர்ந்து பயில்வதால் சுவாசம் தொடர்பான நோய்கள் குணமாகி நீண்ட ஆயுளுடன் வாழ வழி செய்கிறது.

**3. ஆசனங்கள் :**

ஆசனங்கள் ஆறு வகைப்படும். அவை, நின்ற நிலை, உட்கார்ந்த நிலை, முன்பக்கம் குனிந்த நிலை, பின் பக்கம் வளைந்த நிலை, பக்கவாட்டு வளைந்த நிலை, சுழற்சி நிலை ஆசனங்கள் இவற்றைப் பயில்வதால் உடலின் அனைத்து சுரப்பிகளும் நன்றாக இயங்கி நோய் எதிர்ப்பு சக்தி அதிகரித்து ஆரோக்கியமான வாழ்வு வாழ பேருதவியாய் இருக்கிறது. தற்போது ஒருவரின் வயது, உடலின் எடை, வளையும் தன்மை, நோய் இவற்றிற்கு தக்கவாறு பயிற்சிகள் அளிக்கப் படுகின்றன.

யோகக் கலையினை மேம்படுத்த மத்திய, மாநில அரசுகள் பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றன. முன்னாள் பாரத பிரதமர் திரு. அடல் பிஹாரி வாஜ்பாய் அவர்கள் பாராளு மன்ற கூட்டத் தொடரில், சர்வ சிக்வி அபியான் (SSA) என்ற திட்டத்தின் மூலமாக அனைவருக்கும் யோகாப் பயிற்சியினை அளிக்க வேண்டும் என கூறியுள்ளார். அதன் பயனாக சென்னை மண்டலம் முழுவதும் அனைத்து பள்ளி ஆசிரியர்களுக்கும் யோகா பயிற்சி அளிக்கப்பட்டு, அவர்கள் மூலமாக அனைத்து மாணவர்களுக்கும், யோகா பயிற்சி கற்றுத்தரப்படுகின்றது. தமிழக முதல்வர் ஜெயலலிதா அவர்களும் அனைத்து பள்ளிகளுக்கும் யோகா பயிற்சி ஆசிரியர் நியமனம் செய்து, அனைத்து மாணவர்களுக்கும் யோகா பயிற்சியளிக்கப்படவேண்டு மென கூறியுள்ளார். யோகக் கலை யினை மேம்படுத்தவும், வளர்க்கவும் ஆக்கப்பூர்வமான முயற்சிகளை மேற்கொள்ளப்பட மத்திய, மாநில அரசுகளுக்கு நாம் என்றும் நன்றிக்கடன் பட்டவர்களாவோம்.

**யோகா சிடி**

**யோகாக் கலையை செய்திட கோவையிலுள்ள யோகா பப்ளிஷிங் ஹவுஸ் விசிடி-யினை வெளியிட்டுள்ளது. இதன் விலை ரூ. 130/- ஆனந்த ரகஸ்யம் புத்தகத்துடன் ரூ. 200/-.**

**போன் : 2374 2471.**

**DO YOU KNOW 80% OF THE JOB FAILURES ARE DUE TO PERSONALITY CONFLICT?**

**Assess your Personality today!
Through P 3 PROFILING Tool**



**Use our Predictive
Personality
Profiling
System**



**AND KNOW MORE ABOUT
U.
CALL US TODAY
@**

**JobsDB.com**
*Interactive Recruitment Network*

**+91-44-28110890/1127/1161**
**1-D, Prince Arcade, 22-A, Cathedral Road, Chennai-600 086**




- Srinivas

## TAMIL NADU AND THE TURBULENT TRYST WITH TSUNAMIS:

December, Chennai The Tsunami on Sunday, the 26th of December, one surmises is the first in the Indian Ocean. Is it true?... Yes and no: yes since there has been no Tsunami in the Indian Ocean since meteorological recording has commenced, but no since the shores of what we call as Tamil Nadu has experienced such tidal waves at least thrice—once 3000 years ago, once 2000 years ago and once again in 2 B.C when the famous Kaveripoompattinam (now called Poompuhar) was annihilated literary and other sources say.

From present Australia stretching across the Sri Lanka and Maldives and Tamil Nadu to current day South Africa was once upon a time a single continental mass, which people called as Lemuria. It is the havoc played in the northern hemisphere by these waves, which has abstracted these landmasses from each other, Sangam literature says . If not for what we call today as Tsunami—a Japanese tongue-twister, which has become a cliche even with the illiterate rural masses in the past few days—what we call today as Tamil Nadu might have been much bigger and more grandiose in its cultural variety.

**Tsunami 2004:**

Albeit it was a good opportunity to work as a translator with Mr. Paul Watson, Los Angeles Times, the opportunity became an onus tinged with sorrow, in spite of the fact that I travelled dispassionately as a student of journalism.

It is indeed a well-known fact by now that in Tamil Nadu Cuddalore and Nagappattinam have reported most casualties, fatal injuries and the like. While the reactions of the people in both places can be sampled as a sort of totality of the lifelong repercussions that such natural trauma can leave behind to survivors, it is the ruthless vandalism of property in the port cities that is most shocking, since death has become a way of life in a week. In Nagapattinam for instance, huge cranes were trying to pull huge fishing trowlers about 49 metres long, which had been flung about 300 to 400 metres by the Tsunami. Similar statistics have emanated from Cuddalore as well, where most people saw the tidal wave as a suddenly "blackened mass of furious ocean coming for us." Both areas interestingly, due to their propinquity to each other perhaps, reported similar kinds of observations in Sri Lanka.

In Cuddalore for instance, when a man said there were three waves, each ensuing the other within an interval of about half hour to forty minutes, and each with intensity lesser than the other we were bemused; but his fact concurred with what a lady had to say at the port city of Nagapattinam, whose access through the Karaikal bridge has become impossible on account of the crashing of the bridge between Karaikal and Nagapattinam during the wave. The sources at Chennai port say that in Chennai unlike in her Southern neighbouring townships, villages and hamlets only one wave struck around quarter to nine. It had seemed more like a sheet as opposed to a huge wall-like semblance, which the southern villagers had ascribed to the wave. The wave came over the jetty and three or four ships lost their lines before a couple of pilots got their acts together with the tugs. Experienced sailors say that within the ocean due to lack of waves no trace of abnormality is generally felt .

But now, far from the hubbub of the Tsunami's details, it is the relief measures to which the attention turns especially in the wake of U.N's warning about epidemics, if food, health and shelter aren't heeded to soon.

Corpses are being buried all over the place, wherever one finds some piece of earth, in both the port villages. The stench of the dead only accentuates the strength of their memories for which people long. Three villages have been destroyed and yet no relief measure seems to have percolated from the governmental machinery. Removal of corpses, distribution of food packets, medication are all being bestowed by NGOs and volunteering individuals. The horrendous route to some of these destinations at the best of times seems a pretext to the governmental agencies probably.

Tolerance to natural inevitabilities, which veils our weaknesses, is not a matter to be proud about. In the typhoon in Orissa in 2000 more than 100000 died in probably the greatest natural calamity to have hit the region. Yet in weeks the media, the experts, the government and the whole spectrum of responsible people seem to have had enough about it to go on to the next matter. That India, by all means a developing country, doesn't have a monitoring system under the Department of Oceanic Sciences is a shame. At least a cyclonic warning system is a necessity. For the extension of this design one can laud the designs of the Home Ministry and Shivraj Patil. But if this will be an errand relentlessly pursued over a period of time, or if this will be another media show shelved once the dampness of sadness is over, only time can tell. And those who are lucky to survive these scares untouched must fathom that we may not have another time. H




"What Women Want"

**NO MAKING CHARGES*
on Gold and Diamond jewellery**

**(Dec. 15, 2004 - Jan. 15, 2005)**

**Original Kerala Jewellers**, brings you the "What Women Want" offer. **No Making Charges on Gold and Diamond jewellery.** Get authentic European Gemmological Laboratory Certificate, and enjoy **100% buy-back facility** with each Ciemme Diamond jewellery you purchase. We also have an 'Exclusive Diamond Exhibition' displaying the latest jewellery. Drop by, 'cause we know exactly what you want.

OKJ
SINCE 1933
ORIGINAL KERALA JEWELLERS
74, USMAN ROAD

(Opp. Ranganathan St.) T. Nagar. Ph.: 2434 0027 / 2434 5809. **Sundays Open. Valet Parking.**

*Conditions apply

# 2004

**January:** H India and Pakistan resume air links after a truce

H Australia manages to salvage a draw in the Sydney test and the series (1-1) as Steve Waugh retires from test cricket.

**February:** H Election Commission announces dates for the Lok Sabha elections.

H Protest launched against SC's decision over Right to Strike.

**March :** H Rabindranath Tagore's Nobel Prize Memorabilia stolen from the Museum

H Lal Kishen Advani commences a nationwide "India Shining" *yatra*

**April :** H Infosys becomes India's first listed IT company to record turnover of $ 1 billion.

H Actress Sondarya and three others, including her brother, crash to death following an aircraft failure.

H India wins her first test and ODI series on Pakistan soil.

**May :** H General elections are held for the Parliament and several other states. Congress returns to power at the centre following eight years in exile-Sonia Gandhi surprisingly hands over reins to Dr. Manmohan Singh, whose swearing in, his predecessor A.B.Vajpayee attends

H Twelfth standard board exam results are announced in Chennai.

**June :** H Somnath Chaterjee unanimously elected Lok Sabha Speaker.

H Padma Awards given (Padmashri- Rahul Dravid, Sourav Ganguly, Anupam Kher (among 74). Padma Vibhushan- M.N.Venkatacheliah (erstwhile CJI), novelist Amrita Pritam (among 4) and Padma Bhushan- Gulzar, M.V.Kamath, T.N.Seshagopalan (among 17) )

**July :** H Eighty-seven school children are burnt alive at the Saraswathi English Medium School, Kumbakkonam, Tanjore District.

H Counselling to Professional Education in Chennai postponed as a fallout of three cases regarding purview of 22 questions in TNPCEE (Tamil Nadu Professional Courses Entrance Examination), Seniority Factor in the Medical Entrance and the case filed by the Consortium of Professional Arts' and Science Colleges.

**August :** H Major Rajyavardhan Singh Rathore wins Independent India's first individual silver at Athens (August 17)

H Counselling for Medicine (August 6) re-commences, and Engineering Counselling begins in Chennai (August 11).

**September :** H George W. Bush gets Second Term at White House with more than 52 % popular votes and 272 at the Congress.

H Rahul Dravid voted the International Test Cricketer of the Year; Australia the Best Team.

**October :** H The most feared forest Brigand Veerapan dies, allegedly shot by the STF (October 18)

H Jacques Derrida, the Algerian born, French philosopher dies (October 8)

**November :** H Palestinian leader Yasser Arafat (November 11), Novelist Arthur Hailey (November 24) die

H The Kanchi Shankaracharya His Holiness Sri Jayenda Saraswathi is arrested ensuing the murder of Temple Manager Shankararaman.

**December :** H Legendary Carnatic Musician M.S.Subbulakshmi (December 11), resplendent Indian batsman VijayHazare (December 16) and Former Prime Minister Narasimha Rao (December 23) die.

H Earthquake under the Indian ocean bed in the Indonesia triggers first Tsunami in the Indian ocean in centuries. Toll soars to more than 10,000 in four days. Ten countries in the south-east Asian coastline hit including Sri Lanka, India, Malaysia and Maldives. Aftershocks felt in Indonesia, Sri Lanka and the Andaman and Nicobar Islands. Simultaneous earthquake hits Antarctica on December 26th measuring 8.0 on the Richter Scale. H

## 2004-ஐ கலக்கிய யுவன்

இசைக்கு மயங்காத உயிரினங்களே இல்லை. அத்தகைய இசைக்கு நாம் மட்டும் என்ன விதி விலக்கா? இசை என்பது மனதுக்கு நிம்மதியையும், அமைதியையும், தரக் கூடியவையாய் இருந்தது அந்த காலத்தில். ஆனால், இன்று காலம் போகின்ற வேகத்தில் இசையும் வேகமாய் அமைத்து பாடல்களின் வரியும் புரியாமல் எரிச்சலூட்டும் வகையில் பாடல்கள் வந்த வண்ணம் உள்ளன. காலம் செல்கின்ற வேகத்தில் எந்த பாடல்களும் நம்மை சற்று நிறுத்தி கேட்க வைப்பதில்லை. வந்த பாடல்கள் அனைத்தும் ஒரு மாதமோ அல்லது இரண்டு மாதமோ அவ்வளவு தான். அதன் பின் வந்து இடம் தெரியாமல் மறைந்துவிடுகிறது.

இந்த ஆண்டில் (2004) யுவன் சங்கர் ராஜா இசை அமைத்த பாடல்கள் நிறுத்தி கேட்க வைக்கப்பட்ட பாடல்களே ஆகும்.

புலிக்கு பிறந்தது பூனையாகுமா என்ற பழமொழியை நிரூபித்து காட்டியுள்ளார். யுவன், அவர் சென்ற ஆண்டில் இசை அமைத்த பாடல்களும் மெகா ஹிட். பேரழகன், போஸ், 7ஜி ரெயின்போ காலணி, மன்மதன் இந்த திரைப்படங்களும் பாடல்களும் ஹிட் ஆகும்.

யுவனை பொறுத்த வரையிலும் கதாபாத்திரங்களை பேச வைப்பதில்லை தனத இசையிலே சொல்லியிருப்பார். ஒரு படத்தின் வெற்றியை நிர்ணயிப்பது திரைப்படத்துக்கு முன் வெளிவரும் இசையும் ஆகும். யுவன் இசையால் நாம் உடம்பே முறுக்கேறிவிடும். 7 ஜி ரெயின்போ காலணி பொறுத்தவரையிலும் ஒவ்வொரு காட்சிக்கும் அவரது இசை பக்க பலமாக அமைந்துள்ளது. - ரகுராமன்

## அண்டம் முதல் பிண்டம் வரை

ந. சுரேஷ்

இந்த நவீன உலகத்தில் பல துறைகள் முன்னேறி வருகின்றன. எல்லாவித பிரச்சனைகளுக்கும் இப்பொழுது தீர்வு காண்பது எளிதாகிவிட்டது. இதில் மருத்துவமும் அடங்கும். மனிதனின் அடிப்படை தேவைகளில் மருத்துவம் மிக்க மகத்துவம் வாய்ந்ததாகும். ஆங்கில மருத்துவ துறையில் (அலோபதி) பல முன்னேற்றங்கள் வந்துவிட்டபோதிலும், சித்த மருத்துவம் என்றழைக்கப்படும் தமிழ்மருத்துவ முறை பிரசித்தி பெற்றதாகவே இருக்கிறது. கிட்டதட்ட தமிழுக்கும் இந்த வைத்திய முறைக்கும் ஒரே வயதிருக்கும் என்று நாம கூறலாம். சித்தர்களால் அவர்களின் மெய்ஞானம் மூலமும் அனுபவத்தின் மூலமும் வரையறுக்கப்பட்ட முறையே சித்த மருத்துவமாகும். இயற்கை மூலிகை விதைகளையும், செடிகளையும் கொண்டு அளிக்கப் படுவதே சித்த மருந்தாகும்.

அண்டத்திலுள்ளதே பிண்டம், பிண்டத்திலுள்ளதே அண்டம் இந்த அடிப்படையில்தான் சித்த மருத்துவம் இயங்குகிறது. தமிழ் வைத்தியமாம் சித்த வைத்ய முறையை தமிழகத்தில் பலர் அறியவில்லை என்பது வியப்பாக இருந்தாலும், 'யதார்த்தம் அது தான்'

இதை விளக்கும் வகையில் சென்னை அரசு சித்த மருத்துவ மாணவர்கள் சார்பில், "சித்த மருத்துவக் கண்காட்சி 2004", 17.12.2004 முதல் 21.12.2004 வரை நடத்தப்பட்டது. இது போன்ற ஒரு கண்காட்சி நடப்பது இதுவே முதல் முறையாகும். சித்த மருத்துவத்தை மக்கள் அறிந்து கொள்ளவும் அதைப் பற்றிய ஓர் விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்துவதற்காகவே இக்காட்சி நடைபெறுவதாக மாணவர்கள் தெரிவித்தனர்.

இவ்விழாவிற்கு தமிழக அமைச்சர்கள், பொன்னையன், வைத்தியலிங்கம், ஜெயகுமார், தளவாய் சுந்தரம் ஆகியோர் வருகை தந்தார்கள் மற்றும் எட்டாயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் இக்காட்சியை பார்வையிட்டு பயனடைந்தனர்.

இக்கண்காட்சியில் சித்த மருத்துவம் தோன்றிய முறை, முன்னோர்கள் இதை எப்படி பயன்படுத்தினர் என்பதற்கு விளக்கமும் மூலிகை செடிகள் மற்றும் சித்த மருந்துகள் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தன. மனித உடலின் அமைப்பு, நோய்கள் எப்படி வருகிறது அதை வராமல் தடுக்க எப்படிப்பட்ட உணவு முறை இருக்க வேண்டும், நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் எடுக்க வேண்டிய வைத்தியம் மற்றும் அதற்கான மருந்துகளும் வரைபடங்களுடன் இருந்தது.

கற்றோர் மட்டுமின்றி பாமரர்களும் புரிந்து கொண்டு பயன்பெரும் வகையில் மாணவர்கள் மிக விளக்கமாகவும், பொருமையுடனும், பொதுமக்களுக்கு அறிவுருத்தினர். சித்த மருத்துவத்தால் எந்தவித பக்க விளைவுகளுமின்றி, நோய்களை நிரந்தரமாக நீக்குவதோடு மட்டுமல்லாமல் மீண்டும் அந்நோய் வராமல் காப்பதே அதன் சிறப்பம்சமாகும்.

சித்த மருத்துவம் மருந்துகள் முற்றிலும் மூலிகைகளாலே தயாரிக்கப்படுகிறது. இவை லேகியம், மாத்திரை, எண்ணெய், தைலம் ஆகியவையாக கொடுக்கப்படுகிறது.

அயல் நாட்டவரும் இங்கு வந்து சித்த வைத்தியத்தை நம்பி மேற்கொள்ளும் போது, தமிழகத்தில், தமிழ் வைத்திய முறையை நாமும் ஏன் பயன்படுத்தி, பயன்பெறக்கூடாது.

**பட்டம் இன்றி பட்டையை கிளப்பும் போலிகள் :**

எந்த ஒரு பிரபலமான பொருளை எடுத்துக் கொண்டாலும், அதில் போலிகளும் புகுந்துவிடுவது சகஜமாகி விட்டவில்லையில் இவர்கள் மருத்துவத் தையும் விட்டுவைக்கவில்லை. பல போலி மருத்துவர்கள், போலி சான்றிதழ் களை வைத்துக் கொண்டும், அதுவும் இல்லாமலும், மருத்துவம் செய்து பலரிடம் பணத்தை பிடிங்கியதோடு அல்லாமல் அவர் உடல் நலத்தையும் பாதிப்படைய செய்துள்ளனர்.

பெரும்பாலும் இவர்களின் அணுகுமுறை பொதுமக்களை பயமுறுத்துவதாகவே இருக்கும் மற்றும் பொது இடங்கள் மற்றும் பஸ் நிறுத்தத்தில் கண் கவரும் வகையில் வண்ண விளம்பரம் செய்து பயமுருத்துவார்கள். ஏமாற்றுபவனைவிட ஏமாறுபவனே முட்டாள் என்பார்கள். அதற்கேற்றாற்போல் பலர், இன்னும் இவர்களிடம் சென்று ஏமாறுவது வேடிக்கையாக இருந்தாலும், அதுவே வாடிக்கையாகிவிட்டது.

இம்மாதிரி மருத்துவத்திற்கே களங்கம் செய்யும் போலி மருத்துவர்களை காவல் துறையும், அரசாங்கமும் கண்டும், காணாமல் இருப்பது வருத்தத்தை அளிக்கிறது. இனி வரும் காலங்களிலாவது இவர்கள் மீது நடவடிக்கை எடுத்து போலிகளை ஒழிப்பார்கள் என நம்புவோம். ●

# ரஷ் கண்ணா ரஷ்

## எங்கும் கூட்டம்... எதிலும் கூட்டம்...




பள்ளி, கல்லூரி மற்றும் அலுவலகம் செல்லும் அவசரக் கூட்டம்




பொழுதுபோக்கு என்ற பெயரில் நேரத்தை வீணடிக்கும் கூட்டம்.




இந்த வாகனங்கள் தங்கள் உரிமையாளர்களுக்கு காத்திருக்கும் கூட்டம்




விற்பதற்காக காத்திருக்கும் கனிக்கூட்டம்.




அலை ஓய்ந்தாலும் ஓயும், இந்த ரங்கநாதன் தெரு அலைக்கூட்டம் ஓயாது.




எங்களுக்கெல்லாம் முதுமலையில் ஓய்வு கிடையாதாம்...
ஏன் என்றால் நாங்கள் எல்லாம் கல் யானைகளாம்...

தொகுப்பு & புகைப்படம் : அஷ்வத்